HHR16-1-4-TA

# எல்லா கிறிஸ்தவர்களும் எடுத்துகொள்ளப்படுவார்கள் என்பதற்கான வேதாகம அடித்தளம் - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், எதிர்காலத்தில் உலகத்தையே அசைக்கும்விதமான மூன்று காரியங்கள் நிகழும் என்று வேதாகமம் கூறிக்றது. முதலாவது, எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் கோடிக்கணக்கான மக்கள் காணாமல் போவார்கள்; இரண்டாவது, உலகத்தை ஆளும் அதிகாரம் ஐக்கிய நாடுகளிடமிருந்து பறிக்கப்படும். மூன்றாவது, உலகத்தின் தலைவன் எழும்பி தன்னால் இந்த உலகத்திற்கு சாமாதானத்தை கொடுத்து நிலைபடுத்த முடியும் என்பான். இப்படி நடக்க காரணம் என்ன? வேதம் சொல்கிறது, “கர்த்தர் எக்காள சத்தத்தோடு வானங்கள் மீது வருவார்... கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பிறகு உயிரோடு இருக்கும் நாமும் கண்ணிமை பொழுதில் மேகங்கள் வழியாய் சென்றிடுவோம்; மேகங்கள் நடுவே தேவனை சந்திப்போம்; அவரோடு கூட நித்திய நித்தியமாய் வாழ்ந்திடுவோம்.” இந்த வல்லமையான நிகழ்வு சம்பவிக்கும்போது, அவிசுவாசிகள் மட்டுமே பூமியில் கைவிடப்பட்டு காணப்படுவார்கள்.

இன்றைக்கு நம்முடைய தேசத்தில் இருக்கும் தீர்க்கதரிசனங்களை பற்றி நன்கு அறிந்த 3 மேதைகளை அழைத்திருக்கிறேன் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு சம்பவிக்க இருக்கும் எடுத்துகொள்ளுதலை பற்றி வேதாக ரீதியில் விளக்கிடுவார்கள். அவர்கள் Dr. எட் ஹின்சன், ராளிங்க்ஸ் டிவினிட்டி பள்ளியின் முதல்வர் மற்றும் லிபர்டி பல்கலைகழகத்தின் முன்னிலை பேராசிரியராக இருக்கிறார். இவர் ராஜா வருகிறார் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரசங்கியாளராக இருக்கிறார், நாற்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை

தீர்க்கதரிசனங்கள் என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார் மேலும் ஐந்த ஸ்டடி பைபில்களின் எடிடராகவும் இருக்கிறார். இரண்டாவது, Dr. மார்க் ஹிட்ச்காக், வேதாகம வெளிப்பாடு பிரிவின் துணை பேராசிரியராக டல்லாஸ் தியாலஜிகல் செமினரியில் பணிபுரிகிறார். வேதாகம தீர்க்கதரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், பெயித் பைபிள் திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார். மூன்றாவது, Dr. ரான் ரோடாஸ், வசனங்களில் ஆராய்ந்து காரணங்களை அறிதல் ஊழியங்களின் தலைவராக இருக்கிறார். ஐவரும் டல்லாஸ் தியாலகிகள் செமினரியில் பணிபுரிந்துவருகிறார் தீர்க்கதரிசனங்களை குறித்து 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இன்றைய ஜான் அன்கெர்பெர்க் விசேஷ தொகுப்பினை காண உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

நான்தான் ஜான் அன்கெர்பெர்க், உங்களை பார்ப்பதில் மகிழ்ச்சி. இன்றைக்கு சில சுவாரஸ்யமான தலைப்பை பார்க்க இருக்கிறோம். எடுத்துகொள்ளப்படுதளுக்கும் இரண்டாம் வருகைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? வித்தியாசங்கள் இருக்கிறது ஆல்லது இது ஒரு நிகழ்வுதானா. அநேகருடைய எண்ணம் என்னவென்றால் எடுத்துகொள்ளப்படுதல் கிறிஸ்துவின் வருகையை நினைவுபடுத்துகிறது, ஆனால் வசனங்களை வாசிக்கும்போது, இவை இரண்டும் தனித்தனியே மாறுபட்ட நிகழ்வுகள் என்பதை வசனங்களில் வாசிக்கும்போது நமக்கு புலப்படுகிறது. மேலும், அதுமட்டுமல்ல, எடுத்துகொள்ளப்படுதலும் இரண்டாம் வருகையையும் உபத்திர நாட்களால் வேறுபிரித்து காட்டபப்டுகிறது. அது சுமார் ஏழு ஆண்டுகள் இருக்கும். ஆனால் நீங்கள் சில வசனங்களை கருத்தாக கவனிக்கும்படி நான் விரும்புகிறேன், துவக்கமாக இவை, இரண்டும் தனித்தனியேயான நிகழ்வுகள் என்று பார்க்கலாம். ஆரம்பித்திடலாம்.

இங்கு வேதாகம தீர்க்கதரிசனங்களை பற்றிய புத்தகங்களை எழுதிய இரண்டு மேதைகள் இருக்கிறார்கள், ஏற்கனவே அவர்களை அறிமுகம் செய்திருக்கிறேன். Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடாஸ் இங்கு இருக்கிறார்கள். சரி, மார்க், முதலாவது

காரியத்தில் இருந்து துவங்கிட விரும்புகிறேன், இந்த வசனங்களை நீங்கள் வாசித்து காட்டும்படியாக விரும்புகிறேன், அதை நாங்களும் திரையில் காண்பிக்க விரும்புகிறோம், இதை பற்றி நீங்க பேசனும், சரியா? முதலாவது காணப்படும் வித்தியாசம், இயேசு கிறிஸ்து திரும்ப வரும்போது தமது விசுவாசிகளை சந்திக்கும் இடத்தில் இருக்கிற வித்தியாசம் தான். எடுத்துகொள்ளப்படுதலில், கிறிஸ்தவர்கள் தேவனை ஆகாயத்தில் சந்திப்பார்கள் என்று வசனங்கள் கூறுகிறது. அந்த வசனங்கள் எதுன்னு சொல்லுங்க?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, ஒன்று 1 தேசலோனிகேயர் 4:16-18, “ஏனெனில், கர்த்தர் தாமே ஆராவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும்  தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடு இருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்கலோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.” ஒன்று தேசலோனிகேயர் நான்கு கூறுகிறது நாம் எல்லாரும் கர்த்தரை சந்திக்கும்படி மத்திய ஆகாயத்தில் எடுத்துகொள்ளப்படுவோம், ஆனால் இன்னொரு வேத பகுதி கூறுகிறது அதில் இயேசுவே சொல்கிறார் நாம் அனைவரும் அவரை சந்திக்கும்படி எதிர்கொண்டு போய் அவரோடு கூட இருக்கும்படி சென்றிடுவோம் என்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது எந்த பகுதி?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** யோவான் பதினாலு ஒன்றிலிருந்து மூன்று, இயேசு கூறுகிறார், “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அபப்டியில்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். உங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ண போகிறேன். நான் போய் உங்களுக்கு இடத்தை ஆயத்தம் பண்ணின பிற்பாடு நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் வந்து

உங்களை என்னிடமாய் சேர்த்துகொள்வேன்." இங்க இயேசு என்ன சொல்கிறார் என்றால் நாம் அவரோடு கூட இருக்கும்படி எடுத்துகொள்ளப்படும்போது, நாம் எல்லாரும் பிதாவின் வீட்டிற்கு சென்றிடுவோம். அப்ப, எடுத்துகொள்ளப்படுதலின் போது இயேசு பூமிக்கு திரும்ப வரமாட்டார். நாம் அவரை சந்திக்கும்படி மத்திய ஆகாயத்தில் எடுத்துகொள்ளப்படுவோம், அதற்கு பிறகு இந்த பூமியில் உபத்திரவ காலம் நடந்துகொண்டு இருக்கும்போது நாம் அவரோடு பிதாவின் வீட்டில் வாசமாக இருப்போம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நம்முடைய இந்த கண்ணோட்டத்தில் ஒன்று, கிறிஸ்துவானவர் மறுபடியும் இரண்டாவது முறையாக வந்திடுவார், அது மார்க் இப்ப சொன்ன காரியத்தைவிட வித்தியாசமானது. கிறிஸ்து இறங்கிவருவார், வேதாகமத்தின் படியாக, அவரை நாம் மத்திய ஆகாயத்தில் சந்திப்பதோடு, அவர் எருசலேமின் ஒலிவ மலையில் வந்து பாதம் பதிய நின்றிடுவார். இதை வெளிப்படுத்திடும் வசனம் எதுன்னு சொல்லுங்க?

**Dr.ரான் ரோடஸ்:** சகரியா பதினாலு இரண்டு முதல் நான்கு வரை- அருமையான வசனம். என்ன சொல்கிறதென்றால்: "எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன். நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானபடுவார்கள்; ... கர்த்தர் புறப்பட்டு யுத்த நாளில் போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடு  போராடுவார். யுத்த நாளை போல போராடிடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் ஒலிவமலையின்மேல் நிற்கும்..." இது மாறுபட்ட இடம், ஜான். எடுத்துகொள்ளபடுதலில் கிறிஸ்து ஜனங்களை மத்திய ஆகாயத்தில் சந்திப்பார். மேகங்கள் மீது தமது ஜனங்களை சந்திப்பார். ஆனால் இரண்டாம் வருகையின் போது அவர் பூமிக்கு இறங்கி வருவார் அவருடைய பாதங்கள் ஒலிவ மலையின்மேல் வந்து நிற்கும். இப்ப, இந்த இரண்டு இடங்களை பற்றி வாசிக்கும்போது இது இரண்டுமே தனித்தனியே வெவ்வேறு நிகழ்வுகள் என்பது தெள்ள தெளிவாக புலப்படுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அவருடைய வருகையின் இரண்டு நிலைகள்.

**Dr.ரான் ரோடஸ்:** அவருடைய வருகையின் இரண்டு நிலைகள். சிறந்த காரியம் என்னவென்றால் எடுத்துகொள்ளபடுதல் உபத்திரவகாலத்திற்கு முன்பும், இரண்டாம் வருகை உபத்திரவகாலத்திற்கு பிறகும் சம்பவிக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இரண்டாவதாக இரண்டாவது, மறுக்க முடியாத வித்தியாசம், இங்க வித்தியாசம் இருக்குது, இந்த நிகழ்வுகளில் பார்க்கிறோம், ஜனங்களை பூமியில் இருந்து அகற்றுவது யார். சரி, மார்க், வேதம் சொல்கிறது எடுத்துகொள்ளப்படுதலின் போது கிறிஸ்து தாமே தமது விசுவாசிகளை இந்த உலகத்தில் இருந்து எடுத்துகொள்வாராம். அந்த வசனம் எங்கிருக்கு?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, அந்த வசனம், 1 தேசலோனிகேயர் 4:16-17ல இருக்கு.

"கர்த்தர் தாமே ஆராவாரத்தோடும் பிரதான தூதனின் சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இரங்கி வருவார்; கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்; பின்பு உயிரோடு இருக்கும் நாமும் அவருக்கு எதிர்கொண்டு போக மேகமீதில் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துகொள்ளப்படுவோம்; இவ்விதமாய் எப்போதும் கர்த்தருடனே கூட என்றென்றைக்குமாய் இருப்போம்;"

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது, கர்த்தர் தாமே வருவார், எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆமா. ஒருவர் அழகான உதாரணத்தை பயன்படுத்தினார்கள், எடுத்துகொள்ளபப்டுதல் நடக்கும்போது அது இயேசு கிறிஸ்து ஒரு பெரிய காந்தத்தை போல செயல்படுப்வதற்கு ஒப்பாக இருக்குமாம். அவர் தம்மை இந்த உலகத்திற்கு மேலாக நிலைப்படுத்த அவர் தனது குணாதிசயங்களை அப்ன்கிட்டு கொண்ட அனைவரையும் தம்

பக்கமாக அவர் ஈர்த்துகொல்வார் என்பதாக கூறியிருந்தார்கள். அப்ப அவர்தான் எடுத்துகொள்ளப்படுதல் சம்பவிக்கும்போது உலகத்திலுள்ள பரிசுத்தவான்கள் அனைவரையும் கூட்டி சேர்க்கிரவராக இருப்பார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆனா, இரண்டாம் வருகையில் வேறொரு சம்பவம் தான நடக்கிறது. கிறிஸ்து துன்மார்க்கரை நியாயத்தீர்ப்பிற்கு கூட்டி சேர்க்கும்படி தமது தூதர்களை அனுப்புகிறார். அது எந்த வசனம்?

**Dr.ரான் ரோடஸ்:** ஆமா, அதை உறுதிபடுத்திடும் அருமையான வசனம், அதுல நிறைய வசனங்கள் இருக்குது, ஜான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓ, ஆமா.

**Dr.ரான் ரோடஸ்:** ஆனா ஒரு வசனத்த உறுதியாக சொல்ல முடியும் அது உவமைகளில் ஒன்றாக இருக்கிறது அதாவது மத்தேயு 13: 41-42. இந்த வசனம் சொல்கிறது, “மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.” ஒரு விதத்தில் பார்த்தார், கிறிஸ்து அகற்றும் வேலையை செய்கிறார்; யோவான் பதினான்கில் பார்த்தது போல, கிறிஸ்து தம்முடைய ஜனங்களை சேர்த்துகொள்கிறார், தம்மிடத்திற்கு எடுத்துகொள்கிறார். ஆனால் இரண்டாம் வருகையில் தூதர்கள் தான் ராஜ்யத்திற்கு இடறலாக இருப்பவர்களை அக்கிரமம் செய்கிறவர்களையும் இங்கிருந்து அகற்றுபவராக இருப்பார்கள். இது இரண்டுமே இரண்டு வித்தியாசமான நிகழ்வுகள். இரண்டையும் ஒரே நிகழ்வு என்று சொல்ல முடியாது, ஏன்னா வேதமே அதற்கு மாறாக இருக்கிறது. சிறந்த விளக்கம் என்னவென்றால் எடுத்துகொள்ளப்படுதல் உபத்திரவ காலத்திற்கு முன்பும் இரண்டாம் வருகை உபத்திரவ காலத்திற்கு பிறகும் சம்பவிக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மார்க், அடுத்ததை பார்க்கலாமா. மூன்றாவதாக, மூன்றாவது மறுக்க முடியாத வித்தியாசம், வேதம் சொல்கிறது ஒவ்வொரு நிகழ்வின் போதும் பூமியில் இருந்து எடுத்துக்கொள்ளப்படுகிற கூட்டமும் கைவிடப்படும் கூட்டமும் வித்தியாசமாக இருக்கும். எடுத்துகொள்ளப்படுதலில், விசுவாசிகள் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு அவிசுவாசிகள் எல்லாரும் கைவிடப்பட்டு இருப்பார்கள். அதற்கு என்ன வசனம் இருக்குது?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஒன்று தேசலோனிகேயர் 4:17 கூறுகிறது, "பின்பு உயிரோடு இருக்கும் நாம் அனைவரும் எடுத்துகொள்ளப்படுவோம்..." இங்க எடுத்துகொள்ளப்படுவோம் என்ற வார்த்தையானது ராப்ச்சர் என்ற வார்த்தையில் இருந்து உருவான வார்த்தையாக இருக்கிறது. மேகத்தில் அவர்களோடு கூட ஆகாயத்தில் தேவனை சந்திக்கும்படி எடுத்துகொள்ளப்படுவோம். இவ்விதமாய் எப்போதும் தேவனோடு கூட இருந்திடுவோம்." எடுத்துகொள்ளப்படுதலில் விசுவாசிகள் எல்லாரும் எடுத்துகொள்ளப்படுவார்கள்; எடுத்துகொள்ளபடுதலில் கர்த்தராகிய இயேசு தமது பரிசுத்த வான்களுக்காக வந்திடுவார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இரண்டாவது வருகையில் இதற்கு எதிராக நடக்கிறது, ரான். விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை, அவர்கள் தான் இந்த பூமியில் விடப்பட்டவர்களாக இருப்பார்கள், ஆனா அவிசுவாசிகள் எல்லாரும், வேதம் சொல்கிறது, எடுக்கப்பட்டு போவார்கள். அதற்கு வசனம் சொல்லுங்க.

**Dr.ரான் ரோடஸ்:** சரி, பல அருமையான வசனங்கள் இருக்கிறது. அதில் ஒன்றான மத்தேயு 13: 41-42 என்ன சொல்கிறதென்றால், "மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும்

அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." இந்த பகுதியை கவனியுங்கள், "ராஜ்யத்திற்கு எதிராக இருப்பவர்களை சேர்த்து" அவர்கள் எடுக்கப்பட்டு போவார்கள். மேலும் மத்தேயு 13: 49-50 கூறுகிறது, "இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும்; தேவதூதர்கள் புறப்பட்டு நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப்பிரித்து அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்." இங்க மறுபடியும், அவர்கள் எடுக்கபடுகிறார்கள், நியாயத்தீர்ப்பிற்காக அவர்கள் எடுத்துகொள்ளப்படுகிரார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ஆனா பொதுவாக ஜனங்கள் வேறொரு வசனத்தைதான் எடுத்துகொள்ளப்படுதளுக்கு பயன்படுத்துகிறார்கள், அதாவது, ஒருவர் எடுத்துகொள்ளப்படுவார் இன்னொருவர் கைவிடப்படுவார். இந்த வசனத்தின் பின்னணி என்ன?

**Dr.ரான் ரோடஸ்:** சரி, இதன் பின்னணி இரண்டாம் வருகை. உபத்திரவ காலத்திற்கு முன்பு என்று சொல்கிற கூட்டம், அவங்க, ஒருவர் எடுப்பட்டு போவார்கள் ஒருவர் கைவிடபடுவார், என்று சொல்வார்கள் அதை எடுத்துகொள்ளப்படுதல் என்கின்றனர் ஆனால் இது இரண்டாம் வருகைக்கு உரியது. ஆனா இதற்கு இணை வசனமான லூக்கா 17லை பார்க்கும்போது, சீஷர்கள் கேட்க்கிறார்கள், "ஆண்டவரே, இவை, எப்போது சம்பவிக்கும்? இயேசு அவர்களுக்கு ஒரு அருமையான பதிலை கொடுப்பதை இங்கு பார்க்க முடியும். அவர் சொல்கிறார், பிணம் எங்கே இருக்குமோ அங்கே கழுகுகள் கூடும்." நியாயத்தீர்ப்பிற்கு யூதர்கள் சொல்லும் பழமொழி இது. இயேசு சொல்கிறார் எடுக்கப்பட்டு போகிறவர்கள் நியாயத்தீர்ப்பிற்காக எடுக்கப்பட்டு போவார்கள். இந்த வசனத்திற்கும் எடுத்துகொள்ளப்படுதலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை இதை உபத்திரவத்திற்கு முன் என்று சொல்பவர்கள் இப்படி சொல்வார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். எடுத்துகொள்ளப்ப்டுதல் இரண்டாம் வருகையோடு சம்பந்தமில்லாத தனிப்பட்ட ஒரு நிகழ்வு என்பதன் மறுக்க முடியாது வித்தியாசங்களை பற்றி பார்த்துகொண்டு வருகிறோம். ஏன்னா இதை குறித்து வேதாகம் தெளிவாக கூறியிருக்கிறது. நான்காவதாக, வேதம் சொல்கிறது இயேசு உபத்திரவ காலத்திற்கு தொடர்புடைய விதமாக வருவதிலும் ஒரு வித்தியாசம் இருக்கிறதாம். எடுத்துகொள்ளப்ப்டுதலில் இயேசு உபத்திர காலத்திற்கு முன்பு கிறிஸ்தவர்களை எடுத்துகொள்ள வருகிறார், இனிவரும் கோபாக்கினையினின்று அவர்களை மீட்டு கொள்வார். இதற்கு என்ன வசனம் , மார்க்?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, இதற்கும் நிறைய வசனங்கள் இருக்குது. வெளிப்படுத்தல் 3:10 அருமையான ஒன்று. அதாவது, "என் பொறுமையை குறித்து சொல்லிய வசனத்தை நீ காத்துகொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களை சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேல் எங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னை காப்பேன்."இந்த பகுதி என்ன சொல்கிறது என்றால் இயேசு வரப்போகிறார் என்று கூறுகிறது. அதாவது, "சோதனையினின்று உங்களை விளக்கி காப்பேன், அல்லது, சோதனைக்கு உட்படுத்திட மாட்டேன்." பூமியின் மீது வரவிருக்கும் சோதனை. சரி, வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் காலத்தை பற்றி பார்க்கும்போது அது உபத்திரகாலத்தைதான் குறிக்கிறது. அவர் சாதாரணமாக சொல்லவில்லை, "உங்களை நான் சோதனையினின்று விளக்கி காப்பேன்." என்ன சொல்கிறார், "சோதிக்கும்படியாக வரப்போகிற சோதனை காலத்திற்கும் தப்பும்படி உன்னை காப்பேன்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அந்த காலத்திற்கு. அந்த காரியங்களுக்கு.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆமா, அந்த காலத்திற்கு விலக்கிடுவார். ஒன்று தெசலோனிகெயர் 1:10ல் சொல்லியிருக்கிறார், "அவர் மரித்தோரில் இருந்து

எழுப்பினவரும் இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துகொண்டிருக்கிறீர்கள்.” அப்படியென்றால் இயேசு கோபாக்கினையின் நாளுக்கு முன்பாகவே வந்து நம்மை கோபாக்கினையினின்று விலக்கி மீட்டிடுவார். மேலும்  1 தெசலோனிகேயர் 5:9 கூறுகிறது, “தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்.” அப்ப ஒரே சமயத்தில் இரண்டு இடத்தில் இரண்டு மாறுபட்ட நிகழ்வுகள் சம்பவிக்க வாய்ப்பு இல்லை.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** நாம் கோபாக்கினைக்காக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல, ஆனால் இரட்சிப்பை அடையும்படிக்கு நியமிக்க பட்டவர்களாக இருக்கிறோம். இது நரக கோபாக்கினையை பற்றி சொல்ல வில்லை. ஒன்று தெசலோனிகேயர் 5 சொல்கிறது என்னவென்றால் உபத்திரவ காலத்தின் கோபாக்கினையை கூறுகிறது, கர்த்தருடைய பயங்கரமான நாள். அதனாலதான் சொல்கிறார், “உங்களை கோபாக்கினைக்கு என்று நியமில்லாமல் இரட்சிப்படைவதற்கு என்று நியமித்திருக்கிறார்.” இனிவரும் கோபாக்கினையினின்று நாம் விடுவிக்க பட்டு இருப்போம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். ஆனா, ரான், இரண்டாம் வருகையில், இதற்கு எதிர்மாறாக இருக்குமே. இயேசு உபத்திரவ காலத்திற்கு பிறகு இறுதி நியாயதீர்ப்பை அளிக்க வந்திடுவார், தண்டனை, சத்துருவை மேற்கொள்வார், எருசலேமில் இருந்து உலகத்தை ஆளுகை செய்வார். இதற்கு என்ன வசனம்?

**Dr.ரான் ரோடஸ்:** சரி, இதற்கான அசனம் மத்தேயு 24:29-30 ல இருக்கு. இதை கவனமா கேட்க்கும்படி விரும்புகிறேன் சில வார்த்தைகள், அடுத்து, பின்பு போன்ற வார்த்தை. இந்த வார்த்தைகளுக்கு அதிக கவனம் செலுத்தனும். “அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் அந்தகாரப்படும் சந்திரன் ஒளியை கொடாதிருக்கும் நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசையும். அப்பொழுது

மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்; அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." இப்ப, இந்த கால குறிப்புகளை நீங்கள் மாற்றமுடியாது; முடிந்தவுடன், அப்பொழுது. இவை இரண்டும் வெவ்வேறு நிகழ்வுகள். இதை வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் தெளிவாக பார்க்க முடிகிறது. நான்காம் அதிகாரம் பதினெட்டாம் வசனம் உபத்திரவ காலத்தை பற்றி கூறுகிறது, மேலும் பத்தொன்பது பதினொன்று கிறிஸ்து வருவதை சொல்கிறது. இங்க மறுபடியும், இரண்டும் வெவ்வேறு நிகழ்வுகள்தான், சிறந்த விளக்கம் என்னவென்றால் எடுத்துகொள்ளப்படுதல் உபத்திரவ காலத்திற்கு முன்பும் இரண்டாம் வருகை உபத்திரவ காலத்திற்கு பிறகும் சம்பவிக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதை உங்களுக்கு சொல்வதற்கு காரணம் என்னவென்றால், பிரியமானவர்களே, இந்த வசனங்கள் எல்லாம் நம்முடைய நிலையை நமக்கு நன்கு எடுத்துசொல்வதாக இருக்கிறது. தேவன் இதைதான் சொல்லியிருக்கிறார் என்றால், நாம் அதை கவனிக்க வேண்டும். மேலும் எடுத்துகொள்ளப்படுதலும் இரண்டாம் வருகையும் வெவ்வேறு நிகழ்வுகள் என்று வேதம் சொல்கிறது. இரண்டும் வெவ்வேறு நிகழ்வுகள். உண்மை என்னவென்றால் எடுத்துகொள்ளப்படுதல் உபத்திரவ காலத்திற்கு முன்பு சம்பவிக்கும். சரி, ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம் திரும்ப வந்ததும் மேலும் பல காரியங்களை பார்க்கலாம், பலவிதமான அடையாளங்கள், இருக்கிறதா இல்லையா, வெவ்வேறான நிகழ்வுகளின் அடையாளத்தை பார்க்கலாம். தொடர்ந்து இணைந்திருங்கள் நாம் திரும்ப வந்ததும் பல விஷயங்களை பார்க்க இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டு இருப்பவர்கள் Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடாஸ், கிறிஸ்துவின் இரண்டாம்

வருகையில் உள்ள வித்தியாசங்களை பற்றி வேதம் சொல்கிற காரியங்களை பார்த்துவருகிறோம். அதற்கு இரண்டு பகுதிகள் இருக்கிறது என்று சொல்கிறோம். ஒன்று எடுத்துகொள்ளப்படுதல்; இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மாறுபட்ட ஒரு நிகழ்வாக இருக்கிறது. இவை இரண்டும் வெவ்வேறான நிகழ்வுகள் என்று சொல்வதற்கு காரணம் என்னவென்றால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பற்றி வேதம் தெளிவாக கூறியிருப்பதை பார்க்க முடிகிறது. நீங்களும் அதை புரிந்துகொள்ளும் விதமாக சிலவற்றை இப்போது பார்க்கலாம்.

நாம் பார்க்க இருக்கிற ஐந்தாம் வித்தியாசம் என்னவென்றால், மறுக்க முடியாது வித்தியாசம், வேதம் சொல்கிறது எடுத்துகொள்ளப்படுதலின் போது சம்பவிக்கும் அடையாளங்களுக்கும் இரண்டாம் வருகையின் போது நடக்கும் அடையாளங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. எடுத்துகொள்ளப்படுதலுக்கு முன்பாக சம்பவிக்கும் அடையாளங்கள் என்று எந்த அடையாளங்களை பற்றியும் எங்கும் சொல்லப்படவில்லை. அதனாலதான் இது எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்கும் என்று கூறுகிறோம். எந்த நிமிடத்தில் வேணாலும் நடக்கலாம். இதை நாம் கனவு கூட காண முடியாது. இதை சொல்கிற வசனங்கள் இருக்கிறது, அது என்னன்னு சொல்லுங்க, மார்க்?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, பிரபலமான ஒரு வசனம் வந்து 1 தேசலோனிகேயர் 1:9-10.

அதாவது, "ஏனெனில், அவர்கள்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே. சரி, இந்த பகுதி என்ன சொல்கிறது என்றால் அதாவது ஆதி திருச்சபையில், இருந்த விசுவாசிகள், இயேசு மீண்டும் வருவார் என்ற எதிர்பார்ப்போடு இருந்தார்கள். சரி, ஏன் அவர்கள் எப்ப வேண்டுமானாலும் வருவார் என்று சொல்லபப்ட்ட ஒருவருக்காக அவர்கள் எதற்காக காத்திருக்க வேண்டும்? அங்கு சொல்லப்பட்டிருக்கிறது அவருடைய குமாரன்

வானத்திலிருந்து வரும்படி காத்திருந்தார்கள்... இனிவரும் கோபாக்கினையினின்று விடுவிக்க வந்திடுவார்."

எடுத்துகொள்ளப்படுதல் அடியாளம் இல்லாத சம்பவம் என்று வேதம் சொல்வதை நாம் விசுவாசிக்கிறோம். எந்த அடையாளங்களாலும் அது முன்னறிவிக்க படுவதில்லை. உண்மையில், எடுத்துகொள்ளப்படுதலை குறித்த முக்கிய வசனத்தை புதிய ஏற்ப்பாட்டில் பார்க்கும்போது, 1 தெசலோனிகேயர் நான்கு, 1 கொரிந்தியர் 15, யோவான் பதினாலும், எந்த பகுதியிலும் அடையாளங்களை பற்றி சொல்லவில்லை. ஆக எடுத்துகொள்ளப்படுதல் என்ற சம்பவம் எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்கும் நிகழ்வாகும். தீத்து 2:13ல் சொல்லப்பட்டு இருக்கிறதுநமது இரட்சகரும் மகா தேவனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலை எதிர்பார்த்துகொண்டிருப்பதே நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம். ஒன்று கொரிந்தியர் 16, ஆதி திருச்சபையினரின் நம்பிக்கையின் வார்த்தையாக இருந்தவைகளில் ஒன்றுதான் மாரநாதா என்ற வார்த்தை, அதற்கு அர்த்தம், "கர்த்தாவே வாரும்." எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வருவது சாத்தியமல்ல என்று இருந்தால் ஏன் அவரை அழைக்க வேண்டும்? அப்ப, இது திடீரென்று நடக்கும் சம்பவமாகும், எப்ப வேணாலும் இருக்கும், இயேசுவின் வருகைக்கான அடையாலமிருக்காது, இயேசு இந்த பூமிக்கு திரும்பி வருவார் என்ற இரண்டாம் வருகையில் இல்லாத ஒரு சிறப்பு அம்சம் இந்த எடுத்துகொள்ளப்படுதல் என்ற நிகழ்வில் இருக்கிறது.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** இன்னொரு காரியம் என்னவென்றால், எதிர் பாராத வேலை,

உபத்திரவ காலத்திற்கு முன்பு எடுத்துகொள்ளபடுதல் இருக்கும் என்பதுதான் இயேசு எந்த சமயத்தில் வேண்டுமானாலும் வருவார் என்பதற்கு பொருத்தமாக இருக்கும். உபத்திரவ காலத்தின் மத்தியில் ராப்ச்சர் இருக்கும் என்றால், இயேசு வருவதற்கு முன்பு அந்த மூன்றரை ஆண்டுகள் உபத்திரவத்தை கடந்து வர வேண்டியிருக்கும். உபத்திரவத்திற்கு பிறகு என்றால், உபத்திரவ காலம் முழுவதையும் சகிக்கனும். நிச்சயமா இப்போது நாம் உபத்திரவ காலத்தில் இல்லை. இந்த மாதிரியான கண்ணோட்டங்களை நம்புகிறவர்கள்

பொதுவாக காலையில் எழுந்ததும் இந்த நாளாக இருக்கலாம் என்று சொல்ல மாட்டார்கள். அதாவது, இன்றைக்கு ஒருவேளை இயேசு வரும் நாளாக இருக்கலாம். உண்மையாகவே இயேசு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வந்திடுவார் என்ற எண்ணமிருந்தால் நம்முடைய வாழ்க்கை முறையே மாற்றமுடையதாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. சரி, ரான், இரண்டாம் வருகை என்பது முற்றிலும் மாறுபட்ட ஒன்று, ஏன்னா இந்த இந்த காரியங்கள் சம்பவிக்கும் என்று அடையாளங்கள் சொல்லப்பட்டு இருக்கிறது, இயேசுவே அதை பற்றி சொல்லியிருக்கிறார், அவர் பூமிக்கு வருவதற்கு முன்பு சம்பவிப்பவைகள்.

**Dr.ரான் ரோடஸ்:** சரி, அது சரிதான். இருந்தாலும், கிறிஸ்து மறுபடியும் வருவதற்கு முன்பு ஏழு ஆண்டுகள் சில அடையாளங்கள் சம்பவிக்கும் என்று உறுதியாக சொல்ல முடியும். இயேசுவின் வார்த்தைகளில் கூட, பாலாக்குதலும் அருவருப்பும் உண்டாயிருக்கும் என்று கூறியிருக்கிறார். அதாவது யூதர்களுடைய தேவாலயம் அந்திகிரிதுவால் தீட்டு படும்போது இப்படி ஆகும். எப்போது அந்திகிறிஸ்து எருசலேமிற்குள் நுழைவான் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது, யூதர்கள் எப்போது எருசலேமை விட்டு போவார்கள் என்றும் தெரியும். இவை அனைத்தும் உபத்திரவ காலத்தின் மத்தியில்தான் சம்பவிக்கும். நீங்க வெளிப்படுத்தல் புத்தகத்தை பார்க்கும்போது நான்கு முதல் பதினெட்டு அதிகாரம் வரைக்கும், பலவிதமான முத்திரை நியாயத்தீர்ப்புகள் எக்காள நியாயதீர்ப்புகள், கலச நியாயத்தீர்ப்பு அர்மகேதான் யுத்தம் என்று, இரண்டாம் வருகைக்கு முன்பு சம்பவிக்கும் பலகாரியங்களை குறித்து அங்க பார்க்க முடியும். இவை இரண்டும் முற்றிலும் வெவ்வேறான நிகழ்வுகள் தான். எடுத்துகொள்ளப்படுதலுக்கு முன்பு எந்த அடையாளமும் இல்லை. ஆனா இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக திடமான ஏழு வருடத்தின் சம்பவங்கள் அடையாளங்கள் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்ததாக நிகழ்வுகளை நிறுத்துவதை குறித்து பார்க்க இருக்கிறோம், சரியா? ஆட்டத்தை மாற்றுகிறவர். வேதம் சொல்கிறது எடுத்துகொள்ளப்ப்டுதல் மற்றும் இரண்டாம் வருகை இதற்கிடையில் விசுவாசிகள் பலதரப்பட்ட சரீரங்களை பெறுவார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது, சரியா? எடுத்துகொள்ளப்படுதலில் , விசுவாசிகளுக்கு மகிமையான சரீரம் கொடுக்கப்படுகிறது, சரியா? இதற்கு ஆதாரம் எங்க இருக்கு? விளக்கமா சொல்லுங்க.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** 1 கொரிந்தியர் 15 வசனம் 51ல இருந்து ஆரம்பிக்கிறது, “இதோ ஒரு இரகசியத்தை வெளிப்படுத்துகிறேன். நீங்கள் நித்திரையடைவதில்லை, ஆனால் நாமெல்லாரும் மறுரூபமாவோம். ஒரு நொடி பொழுதில், கண்ணிமைக்கும் நேரத்தில், கடைசி எக்காளத்தின் போது, மரித்தவர்கள் எல்லாம் உயிர்த்தெழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளது அழியாமையை தரித்துகொள்ளும், சாவுக்கேதுவானது சாவாமையை தரித்துகொள்ளும்.” சரி, இந்த வசனம் என்ன சொல்கிறது என்றால் எடுத்துகொள்ளப்படுதல் சம்பவிக்கும் போது, எல்லா விசுவாசிகளும் புதிய சரீரத்தை பெற்றுகொள்வார்கள். அழிவில்லாதது, சாவாமையுள்ளது, அழுகிபோகாத சரீரம், பரலோகத்திற்கு ஏற்ற சரீரம். ஒவ்வொரு விசுவாசிகளும், எடுத்துகொல்லுதல் சம்பவிக்கும்போது, உடனடியான மாற்றத்தை பெற்றுகொள்வார்கள். இந்த பூமியில் உயிரோடு இருக்கிற எல்லாருமே ஒரே நொடியில் உடனடியான மறுரூப அனுபவத்தை பெற்றுகொள்வார்கள்.

1 தெசலோனிகேயர் 4:15-17, “கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதுமட்டுமில்ல, "இந்த வார்த்தைகளினாலே ஒருவரை ஒருவர் தேற்றுங்கள் என்கிறது. இது ஆறுதல் அளிக்கிறது அதாவது கிறிஸ்து வரும்போது, நாம இங்கிருந்து மாறி சரீரம் மாற்றப்பட்டவர்களாக இருப்போம், இல்லையா.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** அது சரிதான். எடுத்துகொள்ளப்படுதலுக்கும் இரண்டாம் வருகைக்கும் இன்னொரு வித்தியாசமும் இருக்கிறது அதாவது எடுத்துகொள்ளப்படுதல் தேவனுடைய இரக்கம் தேவ கிருபையினால் உண்டாகும் நிகழ்வு, இரண்டாம் வருகையோ பொதுவாக ஒரு நியாயத்தீர்ப்பின் நிகழ்வாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆனா, ரான், இரண்டாம் வருகையில் முற்றிலும் வித்தியாசமா இருக்கும். வேதம் சொல்கிறது உபத்திரவ காலத்தை கடந்து செல்கிற விசுவாசிகள், எல்லாரும் ஆயிரம் வருட அரசாட்சியில் நுழைந்திடுவார்கள் அவர் இதே சரீரத்தோடு திருமணம் செய்து பிள்ளைகளை பெற்று வாழ்வார்கள். அந்த சமயத்தில் அவர்களுக்கு மகிமையடைந்த சரீரம் இருக்காது.

**Dr.ரான் ரோடஸ்:** சரி, அதுவும் சரிதான். எடுத்துகொள்ளப்படுதலில் என்ன சம்பவிக்கும் என்பதை பற்றிய மாற்றுகருத்தும் இருக்கிறது. அஸ்திபாரம் எதுன்னா, மத்தேயு 25:31ல இருந்து சொல்லபப்டும் ஜாதிகளின் நியாயத்தீர்ப்பு அதாவது வெள்ளாடுகள் செம்மறியாடுகள் பற்றி இருக்கிறது. கிறிஸ்துவின் சகோதரர்களை எப்படி நடத்துகிறார்கள் என்ற அடிப்படையில் நியாயத்தீர்ப்பு உண்டாகும். இதை நான் அந்த வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்படும் லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் யூத சுவிசெஷகர்களுக்கு ஒப்பிடுகிறேன். இப்ப, வெள்ளாடுகள் நேரடியாக பூமியில் இருந்து ஆயிரம்வருட அரசாட்சியில் பிரவேசிக்கும், இதே சரீரத்தோடு. அடுத்த வசனம் என்ன சொல்கிறது. நேரடியாக பிரவேசித்திடுவார்கள். அவர்கள் அந்த நேரத்தில் மகிமையடைந்த சரீரத்தை பெறுவது இல்லை, அவர்கள் பூமிக்குரிய சரீரத்தோடு அங்கே பிரவேசித்திடுவார்கள். சரி, அவங்க உள்ள வந்த பிறகு, ஏசாயா 65:22-24 இவர்களை

பற்றிதான் சொல்கிறது. வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள். அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை;" வேறுவிதமாக சொன்னால், அவர்கள் என்றென்றைக்குமாய் காக்கப்படுவார்கள். நீங்கனால் வாழ்வார்கள். தொடர்ந்து பிள்ளைகளை பெற்றிடுவார்கள். சரி, நீங்க உயிர்த்தெழுந்த பிறகு இப்படி உங்களுக்கு நடக்காது. மகிமையடந்த பிறகு இந்த மாதிரி உங்களுக்கு நடக்காது. ஆனால் இரண்டாம் வருகையை தொடர்ந்து நடக்கும் இந்த ஆயிர வருட அரசாட்சியில் பிரவேசிகிற விசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட சரீரம்தான் இருக்க முடியும். இது எடுத்துகொள்ளபடுதலுக்கு முற்றிலும் மாறுபட்ட காரியமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மார்க், ரான், நாம முடிவிற்கு நெருங்கிவிட்டோம். இந்த வசனங்கள் என்ன சொல்கிறது?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, இரண்டாம் வருகையில் இரண்டு நிலைகள் இருக்கிறதென்று இந்த வசனங்கள் கூறுகிறது. ஒரு நிகழ்வு மட்டுமல்ல. எடுத்துகொள்ளப்படுதல் மற்றும் இரண்டாம் வருகை இரண்டுமே வாதத்தில் இரண்டு நிகழ்வுகள். இந்த நிகழ்வுகளை பற்றி சொள்ளப்பட்டிருப்பவைகள் மறுக்க முடியாதவைகள். ஒரே நிகழ்வை பற்றி மாற்றுகருத்துகள் இருப்பது சாத்தியமல்ல, எனவே இரண்டாம் வருகை எடுத்டுகொள்ளபப்டுதல் இரண்டுமே தனிதனி நிகழ்வுகள். அதை பற்றி பார்த்தோம் அதை குறித்து சொல்லபப்ட்ட பல வசனங்களை ஆதாரமாக பார்த்தோம், எனவே இதெல்லாம் கட்டுகதைகள் அல்ல என்பதை நீங்களே நேரடியாக பார்த்து தெரிந்துகொண்டிருப்பீர்கள், இது நாவல் கதையோ கட்டுகதையோப் அல்ல

உபத்திரவ காலத்திற்கு முன்பு சம்பவிபதாகும். இதெல்லாம் தேவ வசனங்களில் ஆழமாக சொல்லபப்ட்டு இருக்கிறது. நீங்க இதை வாசிக்கும்போது புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஜெபம். இந்த வசனங்களை வாசியுங்கள், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்போது வேண்டுமானாலும் வருவார் என்ற மகிமையின் நம்பிக்கையோடு காத்திருக்கலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இதை உங்கள் மனதில் பதிய வைப்பது விசித்திரமாக இருக்கலாம்; இயேசு எந்த சமயத்திலும் திரும்பி வந்திடுவார். அதை அங்கீகரிக்கிறோம். ஆனால் இதை கேட்டுகொண்டிருக்கிற அநேகர் இயேசு மீண்டும் வருவதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா. அவங்க என்ன செய்யணும் ரான்?

**Dr.ரான் ரோடஸ்:** சரி, அதாவது, லிபரல் சபைக்கு நான் போயிட்டு இருக்கும்போது நான் கிறிஸ்தவன் என்று நினைத்து கொண்டிருந்தேன் ஏன்ன நா சபைக்கு போயிட்டு இருந்தேன். அது தவறு என்பதை நான் சீக்கிரத்தில் தெரிந்துகொண்டேன். வேதாகம தீர்க்கதரிசனம் என் கவனத்தை ஈர்த்தது, ஏன்னா வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை முதல் முறையாக என் வாழ்வில் வேதாகம தீர்க்க தரிசனத்தின் மூலம் தெரிந்துகொண்டேன். தேவ வார்த்தையின் அடிப்படையில் இப்போது, என்னால் ஒவ்வொருவரிடமும் சொல்ல முடியும் இரட்சிப்பு யாவருக்கும் உரிய ஒன்றாக இருக்கிறது. கேள்வி என்னவென்றால், உங்களுக்கு அருளப்பட்டதை நீங்கள் பெற்றுகொல்கிரீர்களா? இரட்சிப்பு இலவச ஈவு. ஆனால் அந்த இலவச ஈவை விசுவாசத்தை கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அந்த இரட்சிப்பை நீங்கள் பெப்ற்றுகொள்ளலாம். பெற்றுகொண்டால், என்னுடைய சத்தத்தை கேட்டுகொண்டிருக்கிற நீங்கள் ஓவ்வொருவரும் தேவனுடைய குடும்பத்தின் பங்காகிடுவீர்கள், நாம் பேசிகொண்டிருக்கிற எடுத்துகொள்ளப்படுதல் நிகழ்வில் நீங்களும் பங்குபெருவீர்கள், இந்த ஜெபமானது உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துவதாக இருக்கட்டும்.

“அன்பின் தேவனே, நீர் இந்த உலகத்தின் இரட்சகர் என்பதை அறிந்திருக்கிறேன். இயேசுவே, என்னுடைய இரட்சகராக இருக்க விரும்புகிறீர் என அறிவேன். நான் ஒரு பாவி. நீர் என் இரட்சகர் என்று தெரியும், மரணத்தில் இருந்து என்னை உயிர்ப்பித்து இருக்கிறீர். உம்மை நான் நம்புகிறேன். உம்மை நான் விசுவாசிக்கிறேன். என்னை உமக்கு அர்பணிக்கிறேன். உம்மை பின்பற்ற விரும்புகிறேன். உமது வார்த்தையை புரிந்துகொள்ள எனக்கு உதவி செய்திடும். இயேசுவின் நாமத்தில்.

இந்த, ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால் உங்கள் இருதயத்தில் நீங்கள் விசுவாசித்தால், நான் நிச்சயமாக சொல்லுவேன் இப்போது நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக மாறிவிட்டீர்கள். நாம் பார்த்த இந்த எடுத்துகொள்ளப்படுதல் நிகழ்வில் நீங்களும் இடம்பெற்றிடுவீர்கள். நீங்கள் நிச்சயம் மகிமையடைந்த சரீரத்தை, உயிர்த்தெழுந்த சரீரத்தை பெறுவீர்கள் இணை வியாதியில்லை, முதிர்ச்சி இல்லை, எந்த பிரச்சனையும் இணை அணுக முடியாது, அழுகையும் வருத்தமும் இல்லை, வேதனைவலி இல்லை. எல்லாம் மறைந்து போய்விடும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான், என்று வேதம் சொல்கிறது, நேயர்களே, நீங்கள் இரட்சிப்படைவீர்கள். இதுவரை ஏற்றுகொள்ளாமல் இருந்தால், இப்போதே முன்வந்திடுங்கள்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கொர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.